**செய்தி வெளியீடு எண்: 572** **நாள்: 25.08.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(25.8.2018)** தலைமைச் செயலகத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை மற்றும் சூளகிரி வட்டங்களில் **2100** ஏக்கர் பரப்பளவில், டிட்கோ மற்றும் ஜி.எம்.ஆர் இன்ஃப்ராஸெட்ரக்சர்ஸ் லிமிடெட் **(GMR)** நிறுவனங்கள் இணைந்து அமைக்கவுள்ள ஜிஎம்ஆர் கிருஷ்ணகிரி சிறப்பு முதலீட்டு மண்டலத்திற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக திகழச் செய்யவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், தமிழகத்தின் வடமாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று அடிக்கல் நாட்டப்பட்ட ஜிஎம்ஆர் கிருஷ்ணகிரி சிறப்பு முதலீட்டு மண்டலத்தில், உலகத்தரமான சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, நீர் சுத்திகரிப்பு நிலையம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், நீர் மற்றும் மின் வசதி, இணையதள வசதி போன்ற வசதிகள் அப்பகுதியில் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு உருவாக்கப்படும். இதன்மூலம் முன்னணி நிறுவனங்களின் முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கப்படும்.

இம்மண்டலத்திற்கான திட்ட மதிப்பீட்டுத் தொகை சுமார் **2420** கோடி ரூபாய் ஆகும். இத்திட்டம் முழுமையாக முடிவுறும் போது **(7–8** ஆண்டுகளில்**), 5000** கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்படுவதோடு, சுமார் **60,000** நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடவும் வழி வகுக்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பா.பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் திரு.ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., GMR குழும நிறுவனத்தின் தலைவர் திரு. G.M. ராவ், GMR குழும நிறுவனத்தின் வர்த்தக தலைவர் திரு.B.V.N. ராவ், ஜிஎம்ஆர் கிருஷ்ணகிரி சிறப்பு முதலீட்டு மண்டலத்தின் தலைவர் திரு.எம்.ஸ்ரீனிவாஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**